DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 5 / 2025**
**P.W. 5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ரெங்கசாமி |
| Father's Name | : | திரு. மலையப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 59 |

(Accused 1 to 4 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of June 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது துவரங்குறிச்சி காவல் நிலையில் உதவி ஆய்வாளராக பணியில் இருக்கிறேன். கடந்த 24.10.2024ம் தேதி நான் துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை பெற்று மருத்துவமனைக்கு 12.30 மணிக்குச் சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பிரபு என்பவரது மனைவி மோகனசுந்தரி கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலையம் வந்து மனு எண்.496/2024 என வழங்கினேன். அதன்பின்னர் 26.10.2024 அன்று மேற்படி மனு எண்.496/2024ஐ விசாரணை செய்து துவரங்குறிச்சி காவல்நிலையக் குற்ற எண்.237/2024, பிரிவுகள் 296(b), 115(2), 353(3) of BNS உடன் இணைந்த பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST Actன் கீழ் வழக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆகும். அந்த அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை விசாரணை அதிகாரி நியமிக்க வேண்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைத்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

இந்த வழக்கின் குற்ற எண்.237/2024 என்றால் சரிதான். இந்த வழக்கின் 3வது எதிரியின் பெயர் விஜயா என்றால் சரிதான். இந்த வழக்கின் 3வது எதிரி விஜயா கொடுத்த புகாரின் அடிப்படையில் இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மோகனசுந்தரி, சாட்சி பிரபு மற்றும் 4 நபர்கள் மீது குற்ற எண்.236/2024 என முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் இணைய தள நகல் **எ.த.சா.ஆ.2** ஆகும். எ.த.சா.ஆ.2 வழக்கானது துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் 3வது எதிரி விஜயா உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் வாக்குமூலம் 23.10.2024 அன்று பெற்றேன் என்றால் சரிதான். ஆனால் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த தேதி மற்றும் நேரம் என 26.10.2024 என இரண்டு வழக்கிலும் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். குற்ற எண்.236/2024 வழக்கை நான் புலன்விசாரணை செய்ய முடியும் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் புலன்விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கின் புகார் வாக்குமூலத்தை 3வது எதிரி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையிலான வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 மோகனசுந்தரி பொய்யாக கொடுத்ததை நான் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. 3வது எதிரி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையிலான வழக்கில் நான் சரிவர புலன்விசாரணை மேற்கொண்டு இருந்தால் இந்த எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து, பொய் வழக்கு பதிவு செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Copy

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No. 5 / 2025
P.W. 7

| | | |
|---|---|---|
| Name | : | மருத்துவர் திருமதி. நஸ்ரின் |
| Father's Name | : | திரு. காஜா முகைய்தீன் |
| Village | : | திருவள்ளூர் |
| Taluk | : | திருவள்ளூர் |
| Caste | : | |
| Calling | : | மருத்துவர் |
| Religion | : | இஸ்லாம் |
| Age | : | 34 |

(Accused 1 to 4 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of June 2026.

**<u>சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டும் என்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க குற்றவியல் பல்வகை மனு எண். 1886/2026ல் நாள்.01.06.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் சென்னை சிட்டி மாவட்ட நீதிமன்றத்திற்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட கடித எண். 718/2026 நாள்.01.06.2026ன் படி மருத்துவர் திருமதி. நஸ்ரின் அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.</u>**

சென்னை சிட்டி மாவட்ட நீதிமன்றத்தில் திரு. திருமூர்த்தி, கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர், சென்னை சிட்டி மாவட்ட நீதிமன்றம், சென்னை என்பவர் Remote point coordinator ஆக இருக்கிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் சென்னை, Medway மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 23.10.2024 அன்று துவரங்குறிச்சி, அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றியபோது, இரவு 07.00

மணியளவில் மருங்காபுரி, காரைப்பட்டி, மஞ்சம்பட்டியை சேர்ந்த பிரபு என்பவரது மனைவி மோகனசுந்தரி, வயது 31, என்பவர் தனக்கு தெரிந்த 4 நபர்கள் தன்னை அன்று மதியம் 3.00 மணிக்கு அவரின் வீட்டின் அருகே வைத்து அடித்ததாக கூறி சிகிச்சைக்கு வந்தார். அவர் தனக்கு வலது கை, கழுத்து மற்றும் இடுப்பில் வலி இருப்பதாக தெரிவித்தார்.

நான் அவரை பரிசோதித்து பார்த்தபோது, அவருக்கு வலது கையில் சிராய்ப்பு காயம் இருந்தது. அவரை உள் நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்து, சிகிச்சை முடித்து டிஸ்சார்ஜ் செய்தேன். மோகனசுந்தரி என்பவருக்கு பதிவு செய்த விபத்து பதிவேடு உடன் கூடிய காயச் சான்றிதழ் **அ.த.சா.ஆ.5** ஆகும். அவருக்கு ஏற்பட்ட சொற்ப காயமாகும். காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

அந்த நபர் தானாகவே சிகிச்சைக்கு வந்தார். அவரை எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அவர் என்னிடம் மஞ்சம்பட்டியில் உள்ள அவரது வீட்டில் வைத்து சம்பவம் நடைபெற்றதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் கீழே விழுவதாலும் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் உறுதியாக கூற இயலாது. அவர் தனக்கு வலது கை, கழுத்து மற்றும் இடுப்பில் வலி இருப்பதாக பொய்யாக கூட கூறியிருக்கலாம் என்றால் வாய்ப்பில்லை. அந்த பகுதிகளில் வெளிப்படையான வீக்கக் காயம் எதுவுமில்லை.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No. 5 / 2025
P.W. 6

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஞா.சரவணபிரபு |
| Father's Name | : | திரு. ஞானசேகர் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 43 |

(Accused 1 to 4 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of June 2026.

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டும் என்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க குற்றவியல் பல்வகை மனு எண். 1887/2026ல் நாள்.01.06.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அரியலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட கடித எண். 719/2026 நாள்.01.06.2026ன் படி திரு.ஞா.சரவணபிரபு அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

அரியலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் திரு.தென்னக சங்கீதா, மொழிபெயர்ப்பாளர், முதன்மை மாவட்ட நீதிமன்றம், அரியலூர் என்பவர் Remote point coordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை, நில சீர்திருத்த ஆணையர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியில் இருக்கிறேன். இதற்கு

முன்பு மருங்காபுரி வட்டாட்சியராக பணியில் இருந்த போது மணப்பாறை உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வேண்டுகோளுக்கு இணங்க இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் ஆகிய மோகனசுந்தரி மற்றும் எதிரிகள் 1. மணி (எ) அடைக்கன், 2. முத்துலெட்சுமி, 3. விஜயா, 4. லெட்சுமி ஆகியோர்களின் சாதி சான்று மெய்த்தன்மை சான்று குறித்து வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அளித்த அறிக்கையின்படி சான்று வழங்கினேன். இந்த வழக்கில் கண்ட நிகழ்நிலை புகார்தாரர் மோகனசுந்தரி என்பவர் இந்து பள்ளன் எனப்படும் பட்டியல் வகுப்பைச் சார்ந்தவர் என்றும் எதிரிகள் 1. மணி (எ) அடைக்கன், 2. முத்துலெட்சுமி, 3. விஜயா, 4. லெட்சுமி ஆகியோர் இந்து அம்பலக்காரர் வகுப்பைச் சார்ந்தவர்கள் என்றும் சாதி சான்றிதழ் வழங்கினேன். நான் வழங்கிய சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சான்று **அ.த.சா.ஆ.4** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.